## ૩. அருண்மாட்சிமை.



*பண் - நட்டராகம்.*

**ஆ**ரொண் கங்கைபுனை யர னாருடை வான்பொருளே
ஊரும் பொன்மயிலில் வந் தொளிர்சிவ ரத்தினமே
தேருந் தொன்மறையின் பொருள் சேரருண் முத்தேநின்
காருண் யம்மிலையேற் கணப் போதினி யுய்யேனே. 1

**வி**ண்ணா டுய்பவர்கள் விரை வெண்மல ராற்புசிதம்
பண்ணா நின்றவுன்றன் றிருப் பாதம் வழிபடுவோர்
நண்ணார் சன்மவுவ ரயி னாயக னேயுனருட்
கண்ணோக் கில்லையெனிற் கணப் போதினி யுய்யேனே. 2

**வி**ண்ணோர் தம்பதியே மிளிர் விண்மணி யின்மணியே
அண்ணா வென்னுயிரே யறு மாமுக ரத்தினமே
பண்ணார் பொக்கிஷமே யெங்கள் பாக்கிய வைப்பேநின்
தண்ணீ ரம்மிலையேற் சணப் போதினி யுய்யேனே. 3

**பூ**க்கும் வெண்பொடிதான் மிகப் பொலிசெம் மேனியனே
தூக்கங் குண்டலங்க டுணி துதைய வெண்டிசையும்
தேக்கச் சாரிவருஞ் சிகித் தேருடை யண்ணாவுன்
நோக்கொன் றில்லையெனி னொடிப் போதினி யுய்யேனே. 4

---

*1. **காருண்யம்** = வடநூரன்முடிபு.*

**மி**ன்னார் வேற்படையாய் விரை வீசுநற் றண்கதம்பா
பொன்னேர் கொள்சிலம்பா புரி மூன்றுடைப் பொன்மார்பா
மன்னார் தெய்வானை வள்ளி மாணிக்க மேயுனருள்
இன்னே யில்லையெனி னிமைப் போதினி யுய்யேனே. 5

**ந**ல்லார் போற்றுசிதஞ் செறி நாவி லெழும்பொருளே
பொல்லா நித்திலமே புரை போகா ரத்தினமே
கல்லா வெற்கருள வந்த கண்மணி யேயுனருள்
இல்லா தேயொழியி னிமைப் போதினி யுய்யேனே. 6

**ஐ**யங் கோள்கடியப் பன்னு மாரண வாரியனே
தெய்வங் கட்கரிய வொரு தெய்வமே சின்மயமே
பையார் கோபதியே பர பாவகி யேயருணீ
செய்யா யேலிங்கியான் றினைப் போதினி யுய்யேனே. 7

**பொ**ய்யா வாழ்வுடையாய் புர மூன்றெரித் தோர்புதல்வா
ஐயார் தென்பொதியப் பதி யமர்மு னிக்கினிய
மெய்யா பொன்பழநித் துரை வேலா வெற்கினருள்
செய்யா யேலிங்கியான் றினைப் போதினி யுய்யேனே. 8

**இ**ன்பார் சாகரமே யென தின்ப மனோரதமே
பொன்பூ மேனியனே பரி பூரண வானவனே
என்பூ சைச்சிவனே வெயி லேறயிற் கையாவுன்
அன்பே யில்லையெனி னணுப் போதினி யுய்யேனே. 9

**வா**ளா ரக்ஷியெழில் வளர் வள்ளி மனோகரமே
நீளா திக்கமெனுஞ் சிவ நேசகிர் பாகரமே
கோளீ னங்குறுகாப் புகழ் கூறின வன்பரனே
ஆளா தேபோனா லணுப் போதினி யுய்யேனே. 10

நந்தன வருடம் மாசி மாதம் 29ஆம் தேதி - மந்தவாரம்.